


## பாமாலை 419 பரிசுத்தம் பெற

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லாத்திரு ஸ்நானத்தினால்
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

Chorus: மாசில்லா சுத்தமா
திருபுண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிடக் குணம் மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறு ஜென்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

3. மாசு கறை நீங்கும் நீசப் பாவியே
சுத்த இரத்தத்தின் சக்தியினால்
முக்தி பேறுண்டாம் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்